**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 30.09.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : 27.09.2021

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

**பொருள்கள்**

(1) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட SRV பெண்கள் மேல்நிலைப் பள்ளி கட்டடங்களுக்கு சொத்து வரிவிதிப்பு குறித்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு நீதிப்பேராணை 10008/2021 வழக்கு தொடரப்பட்டது. நகராட்சி சார்பில் வாதாடிய அரசு வழக்கறிஞர் திரு P. பிரதாப்சிங் அவர்களுக்கு ரூ. 15000/– தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(543/18/அ1)

**தீர்மானம் எண். 1097**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும் நகர பொது மக்களுக்கு கோவிட்–19 நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு, கடந்த 09.09.2021 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | பொருட்கள் விவரம் | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி |
|---|---|---|---|
| 1. | முக கவசம் (3 லேயர்) | ரூ. 4.00 | ரூ. 5.00 |
| 2. | கை கிருமிநாசினி 500 மி.லி. (Hand sanitizer) | 190.00 | 194.00 |
| 3. | நீர்த்த சுண்ணாம்புத்தூள் 1 கி. | 12.18 | 13.00 |
| 4. | பிளிச்சிங் பவுடர் 33% 1 கி. | 46.00 | 48.00 |
| 5. | ஆசிட் 1 லி. | 40.00 | 43.00 |
| 6. | வெள்ளை பினாயில் (வாசைன) 1 லி. | 42.00 | 45.00 |
| 7. | லைசால் 5% 1 லி. | 140.00 | 152.00 |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளதால் ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினங்களை கோவிட்–19 (SDRF) நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(868/20/எச்1)

**தீர்மானம் எண். 1098**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சி திட்டப் பணிகளின் விவரங்கள் தமிழ்முரசு நாளேடு சுதந்திர தின சிறப்பு மலரிலும், மாலை மலர் நாளேடு தொழில் மலரிலும் வெளியிடப்பட்டுள்ளன. அதன் விளம்பரக் கட்டணம் : தமிழ்முரசு – ரூ. 7875/– மாலை மலர் – ரூ. 5000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(3015/2021/இ1)

**தீர்மானம் எண். 1099**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சியில் தெரு விளக்கு பராமரிப்பில் நகராட்சி மூலம் பராமரிக்கப்படும் 14 வார்டுகளிலுள்ள அனைத்து தெரு விளக்குகள், நகராட்சி அனைத்து கட்டடங்கள், இலவச கழிப்பிடங்கள், மேல்நிலைத் தொட்டி வளாகங்கள், அம்மா உணவகம் ஆகியவைகளிலுள்ள மின் விளக்குகள் தொடர் பராமரிப்பு செய்ய தேவையான மின் பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4.00 (ரூபாய் நான்கு இலட்சம்) ஆகும். மேற்காணும் பணிக்கான செலவினத்திற்கு மன்ற அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** நகராட்சி தெரு விளக்குகள் பராமரிப்பிற்கான செலவினம் ரூ. 4.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதியும் வழங்கலாம்.

(3623/2021/இ1)

**தீர்மானம் எண். 1100**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சியில் UTIS மென் பொருள் பணிகள் மற்றும் காணொளி காட்சி ஆய்வுக் கூட்டத்திற்காக நவீன கணினி வாங்கவும், வசூல் மையத்திற்கு பிரிண்டர் வாங்கவும், UPS பேட்டரிகள் பழுதடைந்துள்ளதை மாற்றம் செய்யவும் தயாரிக்கப்பட்ட ரூ. 185000/–(ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) ரூ. 185000/– மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வழங்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
இ) கணினிப் பொருட்களை Gem விலை விகிதத்தில் பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3363/21/இ1)

**தீர்மானம் எண். 1101**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்தவெளிக் கிணற்றிலுள்ள சிறு மின் விசைப் பம்புகள் மற்றும் நீர் முழ்கி மின் மோட்டார்கள் பழுது சரிசெய்யும் பணிக்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ. 8.00 இலட்சம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்..
**2)** இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(3645/21/இ2)**

**தீர்மானம் எண். 1102**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சியில் தெரு விளக்குகள் இல்லாத பகுதிகளில் புதிய LED தெரு விளக்குகள் ஏற்கனவே உள்ள கம்பங்களில் LED தெரு விளக்குகள் 210, புதிய கம்பங்கள் அமைத்து LED தெரு விளக்குகள் 161 மற்றும் புதிய கம்பங்கள் மற்றும் மின் கம்பிகள் அமைத்து LED தெரு விளக்குகள் 352 (மொத்தம் 723 புதிய LED தெரு விளக்குகள்) அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் ஏற்கனவே உள்ள 816 குழல் விளக்குகள், 271 சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் 776 CFL (மொத்தம் 1863 தெரு விளக்குகள்) ஆகியவைகளை LED தெரு விளக்குகளாக மாற்றுதல் ஆகியப் பணிகள் மேற்கொள்ள ரூ. 156.00 லட்சத்திற்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீடான ரூ. 156.00 லட்சத்தை இந்நகராட்சிக்கு முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** ரூ. 156.00 இலட்சம் மதிப்பீட்டிலான மொத்தம் 723 புதிய LED தெரு விளக்குகள் அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள 1863 பிற தெரு விளக்குகளை LED தெரு விளக்குகளாக மாற்றுதல் ஆகியப் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**(2690/2021/இ1)**

**தீர்மானம் எண். 1103**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– சி. கிருபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (கூ.பொ.),
இராசிபுரம் நகராட்சி